Clr.No.19

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. CC/ 310/2024** |
| **Sessions** | : | |
| **Deposition of witness for** | : | **Prosecution PW3** |
| **Name** | .. | திரு. N. பார்த்திபன்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>M6 மணலி காவல் நிலையம் |
| **Father's/Husband's Name** | .. | K. நாராயணசாமி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **35** |

**Date: 20.04.2026**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜார்
முதல் விசாரணை

1. நான் தற்போது M6 மணலி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் உதவி ஆய்வாளர் திரு. சரவணன் பணி மாறுதலில் சென்று விட்டதால் அவரது கையொப்பம் நன்கு பரிச்சையம் அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 05.02.2021ம் தேதி மதியம் 13.30 மணியளவில் மணலி காவல் நிலைய உதவி ஆய்வாளராக இருந்த திரு சரவணன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த போது திரு. பால்ராஜ் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு ரசீது எண் 34/2022 என வழங்கி விசாரணை செய்துள்ளார். மேற்படி சம்பவமானது உண்மை என தெரியவந்ததன் பேரில் மேற்படி புகாரின் பேரில் 06.02.2022ம் தேதி காலை 08.00 மணி அளவில் M6 மணலி காவல் நிலைய குற்ற எண் 38/2022, சட்டப்பிரிவுகள் 448, 324, 506(ii) IPCன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின் 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவயிட சாட்சிகள் அஜய் பிரசன்னா மற்றும் பழனி முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. அபுல், நவீன் குமார், சூர்யா, விக்னேஷ் ஆகியோர்களை விசாரிணை செய்து சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் காலை 10.00 மணி அளவில் மணலி மார்க்கெட் அருகே இருந்த இவ்வழக்கின்

எதிரிகளான தரணி பாபு, செல்வக்குமார் (எ) செல்வா, குமார் ஆகியோர்களை கைது செய்து சம்பவ இடத்தின் சாட்சிகளாகிய கணேஷ், சுகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.12 மணிக்கு எதிரி 1 தரணி பாபு தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். (**ஒப்புதல் வாக்கு மூலம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்திய கட்டை ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் படிவம் 91 மூலம் கைபற்றியுள்ளார். (**படிவம் 91 அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) (**கட்டை சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு எதிரிகளை நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

4. பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அபுல் என்பவருக்கு முதல் சிகிச்சை அளித்த ஸ்டான்லி அரசு மருத்துவர் திரு. சார்லஸ் என்பவரையும், சொர்ப காயம் என சான்று வழங்கிய திரு. ராஜ்குமார் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (**காயச்சான்று அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு விசாரணை முடித்து 10.03.2021 அன்று இவ்வழக்கின் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

5. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிக்கு எதிராக தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2026.04.20 11:44:40 +0530

**நீதித்துறை நடுவர்,**
**திருவொற்றியூர்**